248

சுருக்கம்.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் 32 முன்னோடி வட்டாரங்களில் செயல்பட்டு வரும் 3,963 குழந்தைகள் நல மையங்களுக்கு வாணலி மற்றும் கரண்டி வாங்கி வழங்க ரூ.22,23,243/– க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந 4–1) துறை,

அரசாணை (நிலை)எண்.82

நாள். 06 –09–2013.
திருவள்ளுவர் ஆண்டு 2044.
ஆவணி 21 ம் நாள்.

படிக்க:

1) அரசாணை(நிலை) எண்.267, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 02–11–2012,

2) முதன்மைச் செயலாளர்/சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களின் கடித எண். 17912/சஉதி/2012, நாள் 24–02–2012 மற்றும் 24–02–2013.

-------

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு மையங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஒரே மாதிரியான உணவு வகைகளுக்கு பதிலாக, புதிய வகை உணவுகளை அறிமுகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியுடன் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய உணவு வகைகளை தயாரித்து வழங்க தேவைப்படும் 5 வகையான சமையல் உபகரணங்களை கடாய் (இண்டோலியம்) ரூ.495/–லும், சாதம் கலக்கும் தட்டு(எவர்சில்வர்)ரூ.420/லும், அஞ்சறைப்பெட்டி (எவர்சில்வர்) ரூ.580/–லும், கரண்டி (எவர்சில்வர்) ரூ.66/–லும், பேசின் (எவர்சில்வர்) ரூ.435லும், ஒரு செட் சமையல் உபகரணங்கள் ரூ.1996/– வீதம், 54439 குழந்தைகள் நல மையங்களுக்கு மொத்தம் ரூ.10.87 கோடி செலவில் சமையல் உபகரணங்கள் கொள்முதல் செய்திட அரசின் அனுமதியினை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் கோரியுள்ளார்.



258

3) முதன்மைச் செயலாளர்/சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களின் கருத்துருவை ஆராய்ந்த அரசு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் 32 முன்னோடி வட்டாரங்களிலுள்ள 3963 குழந்தை நல மையங்களுக்கு தலா ஒரு கடாய் (இண்டோலியம்) ரூ.495 விலையிலும் மற்றும் தலா ஒரு கரண்டி (எவர்சில்வர்) ரூ.66 விலையிலும் என மொத்தம் ரூ.561 வீதம் சமையல் உபகரணங்கள் ரூ.22,23,243/– (561x3963) (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து இருநூற்று நாற்பத்தி மூன்று மட்டும்) செலவில் வாங்குவதற்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படுகிறது:–

> "2236 சத்துணவு –02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 மதிய உணவு பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் KV– அங்கன்வாடி மையங்களுக்கு கருவிகளும் தளவாடங்களும் வழங்குதல் 24.00 பொருள்களும் வழங்கலும்."
>
> (த.தெ.கு.2236 02 102 KV 2402)

5) மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது பணி (New Service) குறித்த திட்டமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளுடன் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் ஆணையர், சென்னை–113, அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வரவு–செலவு பொது–1/ச.ந.)த் துறைக்கு அனுப்புமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் ஆணையர், சென்னை–113 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண். 193/DS(VS) நாள். 09–07–2013ன்படி வெளியிடப்படுகிறது. மேலும் இதற்கான கூடுதல் நிதியொக்க பேரேடு எண்.618(ஆறுநூற்று பதினெட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு.பஷீர் அஹமது
அரசு செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள்
வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை – 600 113.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை– 600 010.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை– 600 015.



259

255

280

தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை–600 002.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 600 009
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை) சென்னை – 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79 மற்றும் மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை – 9
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009
நிதி (சந/ வ.செ.பொ.1/ வ.செ.பொ.2) துறை, சென்னை– 600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.2, ச.ந.7) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

6/9/2013



260